செ.வெ.எண் -17 நாள்:11.01.2018

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வாயில் முன்பாக சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து கரும்பு ஏற்றிவரும் டிராக்டர்களுக்கு ஒளிரும் வில்லைகளை ஒட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் சாலை பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வு குறித்து கோத்தாரி சர்க்கரை ஆலையின் சார்பில் கரும்பு ஏற்றிவரும் டிராக்டர்களுக்கு பின்பிறமும், பக்கவாட்டிலும், முன்புறமும் ஒளிரும் வண்ண வில்லைகள் (Stickers) ஒட்டப்படுகின்றன.

இதனால், இரவில் பின்புறம், பக்கவாட்டில் வாகனங்கள் விபத்தின்றி, சிரமமின்றி வாகனங்களை இயக்க முடியும். நிற்கும் டிராக்டர் வண்டிகளை உணர்ந்து வாகன ஓட்டிகள் வண்டி ஓட்டுவதற்கு வசதியாக இருக்கும்.

மேலும், சர்க்கரை ஆலையில் கரும்பு ஏற்றிவரும் 120 வாகனங்களுக்கும் இந்த ஒளிரும் வில்லைகள் ஒட்டப்பட்டு வருகிறது. சாலை பாதுகாப்பு தொடர்பான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகம் சார்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஜே.சுரேஷ்குமார், வட்டார போக்குவரத்து அலுவலர் சி.கே.ஜெயதேவ்ராஜ், கோத்தாரி சர்க்கரை ஆலை துணை பொது மேலாளர் கா.இளமுருகன், கரும்பு மேலாளர் மு.ரவிக்குமார், ஆலை மக்கள் தொடர்பு அலுவலர் பாலகிருஷ்ணன், கரும்பு அலுவலர்கள் கே.கிருஷ்ணர், எ.சிக்கந்தர்பாட்ஷா ஆகியோர் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.